01) ரூபா 2100 ஆக விற்கப்பட்ட சமையல் எரிவாயுவின் விலை 15% ஆல் அதிகரிக்கப்பட்டது எனின் அதிகரித்த விலையைக் காண்க.

02) $lg\ 3 = 0.4771$ என்பதை சுட்டி வடிவில் எழுதுக.


03) சுருக்குக. $\frac{2}{3x} + \frac{1}{6x}$

04)



உருவிலுள்ள தரவுகளைப் பயன்படுத்தி x இன் பெறுமானத்தைக் காண்க.

05)



கட்டிடத்தின் உச்சி X இல் இருந்து கட்டிடத்தின் அடியிலிருந்து $100\ m$ தூரத்திலுள்ள புள்ளி B யை $30°$ இறக்கக் கோணத்தில் காண்கின்றார். இத்தரவுகளை அருகிலுள்ள பரும்படிப் படத்தில் குறித்துக் காட்டுக.


www.ikedu.lk

06) $3ab^2$, $6ab$ என்னும் இரு அட்சரகணிதக் கோவைகளின் பொதுமடங்குகளில் சிறியதைக் காண்க.

07) $x^2 - 10x - 24$ காரணிப்படுத்துக.

08) A யும் B யும் மூட்டற்ற தொடைகளாகும். $n(\varepsilon) = 12$, $n(B) = 2$, $n(A \cup B)' = 4$ ஆயின் $n(A)$ யைக் காண்க.


09)



$ABCD$ ஓர் இணைகரம். $B\hat{A}D = 60°$, $D\hat{C}E = 40°$ எனின் $D\hat{E}C$ யைக் காண்க.


10) $2x - 1 \geq 5$ என்ற சமனிலியைத் தீர்த்து தீர்வை எண்கோட்டில் குறித்துக் காட்டுக.

www.lkedu.lk

11) 


உருவில் $AC = BD$, $B\hat{A}C = A\hat{B}D$ எனின் ΔABC, ΔABD என்பன ஒருங்கிசைவதற்கான நிபந்தனை யாது?

12) 4 மனிதர்கள் 3 நாட்களில் செய்யும் வேலையின் 50 % ஐ 2 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?

13) 

தரப்பட்டுள்ள உருவில் $B\hat{A}C = 100°$ ஆயின் $D\hat{O}C$ இன் பெறுமானம் யாது?


14) காலணையிடை வீச்சைக் காண்க.



www.lkedu.lk


15) 

செவ்வட்ட உருளையின் தட்டையான முகம் ஒன்றின் பரப்பளவு $44\ cm^2$ உம் உயரம் $10\ cm$ உம் ஆயின் அதன் கனவளவைக் காண்க.

16) 


O வை மையமாகக் கொண்ட வட்டத்தில் AB என்பது $18\ cm$ நீளமான நாணாகும். வட்டத்தின் மையத்திலிருந்து நாணிற்கு வரையப்படும் செங்குத்தின் நீளம் $12\ cm$ எனின் வட்டத்தின் ஆரையைக் காண்க.

17) $(1 \quad 3)\begin{pmatrix} 2 & y \\ -1 & 1 \end{pmatrix} = (x \quad 3)$ ஆயின் x, y இன் பெறுமானத்தைக் காண்க.

18) 


O வை மையமாகக் கொண்ட வட்டத்தில் தரவுகளை உபயோகித்து a, b யிற்கு இடையிலான தொடர்பை எழுதுக.

www.lkedu.lk

19) 

உருவின் பரப்பளவைக் காண்க.


20) $4x^2 = 1$ என்ற சமன்பாட்டின் தீர்வுகளைப் பெறுக.

21) 


O வை மையமாகக் கொண்ட வட்டத்தில் தரப்பட்ட தரவுகளைக் கொண்டு x, y இன் பெறுமானங்களைக் காண்க.

22) குறித்த தூரத்தை $12\ kmh^{-1}$ என்னும் கதியில் 30 நிமிடங்களில் கடக்கும் ஒருவர் $18\ kmh^{-1}$ என்ற கதியில் கடக்க எடுக்கும் நேரத்தைக் காண்க.

www.ikedu.lk

23) 

BC, BA இலிருந்து சமதூரத்திலும் A, B இலிருந்து சமதூரத்திலும் உள்ள புள்ளி P ஐக் காண்பதற்குத் தேவையான அமைப்புக் கோட்டின் பரும்படிப் படத்தை வரைக.

24) 

O வை மையமாகக் கொண்ட வட்டத்தில் உள்ள புள்ளிகள் A, B, C, D ஆவதோடு $B\hat{D}A = 20°$ ஆகும். a, b இன் பெறுமானங்களைக் காண்க.

25) கூடை ஒன்றினுள் 5 சிவப்பு நிற அப்பிள்களும் 3 பச்சை நிற அப்பிள்களும் 1 மஞ்சள் நிற அப்பிளும் உள்ளன. எழுமாற்றாக ஓர் அப்பிள் பழத்தை எடுக்கும் போது சிவப்பு நிற அப்பிள் கிடைக்காமைக்கான நிகழ்தகவு யாது?

www.ikedu.lk

பகுதி - I B

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01) ரவி சம்பளத்தில் $\frac{1}{4}$ ஐ உணவிற்கும் $\frac{1}{6}$ ஐ போக்குவரத்திற்கும் செலவு செய்கிறார். மீதிப் பணத்தில் $\frac{2}{7}$ ஐ புத்தகம் வாங்க செலவு செய்கின்றார்.

(a) உணவு, போக்குவரத்து ஆகிய இரண்டிற்கும் ரவி தனது சம்பளத்தில் எவ்வளவு பங்கை செலவு செய்கின்றான்?


(b) புத்தகத்தை வாங்க ரவி தனது சம்பளத்தில் எவ்வளவு பங்கை செலவு செய்கின்றார்?

(c) புத்தகத்தை வாங்கிய பின்னர் ரவியிடம் எஞ்சிய பணத்தின் அளவு முழுப்பணத்தின் என்ன பங்கு ஆகும்?

(d) இப்போது அவர் தம்மிடமுள்ள மீதிப்பணத்தில் $\frac{1}{5}$ ஐ ஒரு வங்கிக் கணக்கில் வைப்புச் செய்கின்றார். அவ்வாறு வைப்புச் செய்த பணம் ரூபா 4000 எனின் ரவியின் சம்பளம் என்ன?

www.ikedu.lk

02) மருத்துவ ஆய்வுகூட கட்டடமொன்றின் தரையின் பரும்படியான கிடைப்படம் உருவில் காட்டப்பட்டுள்ளது. அது ABC என்னும் அரைவட்டப் பகுதியையும் $GDEF$ என்னும் செவ்வகப் பகுதியையும் கொண்டது. $AG = GD = DC$ ஆகும். $FE = 14\,m$.



(I) அரைவட்டத்தின் ஆரை யாது?

(II) அரைவட்டப் பரப்பைக் கணிக்க.

(III) அரைவட்டத்தின் விட்டமும் செவ்வகப் பகுதியின் நீளமும் சமமெனின் உருவின் மொத்தப் பரப்பைக் கணிக்க.

(IV) உருவின் சுற்றளவைக் கணிக்க.

www.lkedu.lk

03) நிறுவனமொன்றில் பங்கொன்றின் பெறுமதி ரூபா 145 ஆகும்.

(a) விமல் அந்நிறுவனத்திலிருந்து 800 பங்குகளை கொள்வனவு செய்தால் அப்பங்குகளை கொள்வனவு செய்ய முதலிட்ட தொகை யாது?

(b) விமலுக்கு வருட இறுதிப் பங்குலாபமாக ரூபா 12800 கிடைத்ததெனின் அந்நிறுவனம் பங்கொன்றிற்று வழங்கும் வருடாந்த பங்கிலாபம் யாது?


(c) இந்நிறுவனத்தில் அதே விலைக்கு பங்குகளைக் கொள்வனவு செய்த நிமலுக்கு ரூபா 22400 வருடாந்த பங்கிலாபமாகக் கிடைக்குமெனின் அவர் நிறுவனத்தில் முதலிட்ட தொகை யாது?

(d) விமல் தன்னிடமிருந்த 800 பங்குகளில் 600 பங்குகளை குறித்த விலைக்கு விற்றதால், அவரது மொத்த முதலீட்டிலும் பார்க்க ரூபா 4000 கூடுதலாகக் கிடைத்தது எனின் அவர் ஒரு பங்கை என்ன விலைக்கு விற்றார்?

www.lkedu.lk

04) குறித்த பாடசாலை ஒன்றில் தரம் 11 இல் கல்விகற்கும் மாணவர்களின் நிறை தொடர்பான பூரணமற்ற அட்டவணையும், வலையுரு வரையமும் கீழே தரப்பட்டுள்ளன. $(35-40$ என்பது 35 அல்லது அதனிலும் அதிகம் 40 இலும் குறைவு ஆகும்)

மாணவர்களின் நிறை (kg)	$35-40$	$40-50$	$50-55$	$55-60$	$60-75$	$75-80$
மாணவர்களின் எண்ணிக்கை	.....	.....	.....	11	15	4



(i) வலையுரு வரையத்திற்கு ஏற்ப அட்டவணையின் வெற்றிடங்களை நிரப்புக.

(ii) வலையுருவரையத்தைப் பூரணப்படுத்துக.


(iii) வலையுருவரையத்தைப் பயன்படுத்தி மீடிறன் பல்கோணி வரைக.

(iv) அவ்வகுப்பிலுள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை யாது?

(v) குறித்த தரம் 11 வகுப்பில் $55\,kg$ அல்லது அதிலும் கூடிய நிறையுடைய மாணவர்களின் சதவீதத்தைக் காண்க.

www.keou.lk


05) (a) பெட்டியொன்றினுள் வடிவிலும் அளவிலும் சமனான 3 விளாம்பழங்களும், 2 விளாங்காய்களும் இருந்தன. அருண் இப்பெட்டியிலிருந்து எழுமாறாக ஒன்றை வெளியே எடுத்தான். அது பழுத்ததாக இருந்தால் மாத்திரம் அதனைத் தனது தங்கைக்குக் கொடுத்தான். பழுக்காமல் இருந்தால் அதனை மீண்டும் பெட்டியிலிட்டு இன்னும் ஒன்றை எழுமாறாக எடுத்தான்.



(i) இந்நிகழ்ச்சிக்கான மாதிரிவெளியை நெய்யரியில் குறித்துக் காட்டுக.

(ii) வெளியே எடுக்கப்பட்ட இரண்டும் பழுத்த விளாம்பழங்களாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

(b) (I) வாகனங்களின் புகை பரிசோதனை செய்யும் நிலையமொன்றில் அனுபவத்திற்கு ஏற்ப முச்சக்கரவண்டியொன்று பாவனைக்குத் தகுதியற்றதற்கான நிகழ்தகவு $\frac{3}{8}$ ஆவதோடு, மோட்டார் சைக்கிளொன்று தகுதியற்றதற்கான நிகழ்தகவு $\frac{1}{7}$ எனக் கூறப்பட்டது. ஒரு முச்சக்கரவண்டி பரிசோதிக்கப்பட்ட நிகழ்ச்சிக்கான தகுதியான, தகுதியற்ற என்பதைக் காட்டும் பூரணமற்ற மரவரிப்பட மொன்று கீழே வழங்கப்பட்டுள்ளது. இடைவெளிகளைப் பூரணப்படுத்துக.



(II) அதன்பின் பரிசோதிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளுக்கான தகுதியான, தகுதியற்ற நிகழ்ச்சிகளைக் காட்டும் மரவரிப்படத்தை நீடிக்க

(III) ஒரு வாகனம் மாத்திரம் தகுதியற்றதாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

www.ikedu.lk

10066

மாகாணக் கல்வித்திணைக்களம்
வடக்கு மாகாணம்
ஆண்டிறுதிப் பரீட்சை - 2019

தரம்:11 | சைவநெறி | நேரம் : 3.00 மணித்தியாலம்

சுட்டெண்:..... | 12 | T | I

கவனிக்க:

I.எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

III. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தின் உள்ளே புள்ளடியை (X) இடுக.

பகுதி – I

எல்லா வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

01. "விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்....." என கபில தேவநாயனார் போற்றும் கடவுள்
1. சிவன் 2. விநாயகர் 3. சக்தி 4. விஷ்ணு

02. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கமைய இறைபணி செய்தவர்
1. சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. மணிவாசகர்

03. திருமலைச் சருக்கம் முதல் வெள்ளானைச் சருக்கம் வரையுள்ள நூல்
1. தேவாரம் 2. திருவாசகம் 3. பெரியபுராணம் 4. கந்தபுராணம்

04. இலங்கையில் மிக உயரமான கொடிமரம் அமைந்துள்ள ஆலயம்
1. நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்
2. ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம்
3. திருக்கேதீஸ்வரம்
4. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்

05. "தன்னை ஒப்பாய் ஒன்றுமில்லாத் தலைமகன்.." என பரம்பொருளைச் சுட்டும் நூல்
1. திருப்புகழ் 2. திருமந்திரம் 3. திருவருட்பயன் 4. திருவாசகம்

06. உடலாலும் உள்ளத்தாலும் இருவரும் ஒருவர் என்ற தத்துவத்தை உணர்த்தும் கிரியை
1. கன்னிகாதானம் 2. இரட்சாபந்தனம் 3. மாலைமாற்றுதல் 4. பாணிக்கிரகணம்

07. நிர்வாண தீட்சை பெற்ற ஒருவர் குருப்பட்டம் பெறுவதற்காக செய்யப்படும் கிரியை
1. ஆசாரிய அபிடேகம் 2. சமயதீட்சை 3. நிர்வாணதீட்சை 4. கும்பஅபிடேகம்

www.ikeu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

தரம் 04

தமிழ்	சனி மற்றும் ஞாயிறு 7.15 - 8.15 pm
கணிதம்	செவ்வாய் மற்றும் வியாழன் 7.00 - 8.00 pm
சுற்றாடல்	திங்கள் மற்றும் புதன் 6.00 - 7.00 pm
ஆங்கிலம்	சனி 10.00 - 11.00 am
Spoken English	ஞாயிறு 9.00 -10.00 am
நுண்ணறிவு	சனி மற்றும் ஞாயிறு 6.15 - 7.15 pm
சிங்களம்	வியாழன் 6.00 - 7.00 pm

76667-4945

08. பிற்கால அர்ச்சனை முறைக்கு வித்திட்ட வேதம்

1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வம்

09. ஒரு பாடலின் முடிவுச் சொல் அடுத்த பாடலின் தொடக்கமாக அமைந்துள்ள நூல், அதன் ஆசிரியர்

1. சகலகலாவல்லிமாலை, குமரகுருபரர் 3. அபிராமிஅந்தாதி, அபிராமிப்பட்டர்
2. பராபரக்கண்ணி, தாயுமானவர் 4. கந்தரலங்காரம், அருணகிரிநாதர்

10. பாலுக்கு அழுத பாலகன் எனக் குறிப்பிடப்படுபவர்

1. சம்பந்தர் 2. மெய்கண்டார் 3. நம்பியாண்டார் நம்பி 4. உபமன்யு

11. சைவ சித்தாந்தம் கூறும் ஆன்மீக மார்க்கங்களாக அமைபவை

1. சைவநாற்பாதம் 3. சிவசின்னங்கள்
2. குருலிங்கசங்கம வழிபாடு 4. மேற்கூறிய யாவும் சரி

12. "பாஅய்ப் பகல்செய்வான் பாம்பின் வாய்ப்பட்டான் கொல்.." என சூரிய கிரகணம் பற்றிக் குறிப்பிடும் நூல்

1. கலித்தொகை 2. மலைபடுகடாம் 3. திருமந்திரம் 4. சிவஞானசித்தியார்

13. "ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்..." என்று வித்யா தானத்தை சிறப்பாகப் போற்றியவர்

1. விபுலாநந்தர் 2. விவேகானந்தர் 3. பாரதிதாசன் 4. மகாகவி பாரதியார்

14. திருக்கோயில்களில் 'திருநந்தவனம்' அமைத்து, தொண்டு செய்து சிவபதம் அடைந்த நாயன்மார்கள்

1. திலகவதியார், திருநாவுக்கரசர், அப்பூதியடிகள்
2. முருகநாயனார், சிவகாமியாண்டவர், நமிநந்தியடிகள்
3. திலகவதியார், முருகநாயனார், சிவகாமியாண்டவர்
4. முருகநாயனார், இளையான்குடிமாறனார், திலகவதியார்

15. திருமந்திரத்தில் அணைந்தோர் இயல்பு பற்றிக் கூறும் தந்திரம்

1. முதலாம் தந்திரம் 3. ஒன்பதாம் தந்திரம்
2. இரண்டாம் தந்திரம் 4. ஐந்தாம் தந்திரம்

16. தேவர்களை சிறைமீட்ட பகுதி அமைந்துள்ள காண்டம், நூல்

1. யுத்தகாண்டம், கந்தபுராணம் 3. தட்சகாண்டம், கந்தபுராணம்
2. யுத்தகாண்டம், இராமாயணம் 4. அசுரகாண்டம், கந்தபுராணம்

17. பிரபோத சைதன்யர் என்ற பிரமச்சாரிய நாமம் கொண்டவர்

1. விவேகானந்தர் 2. விபுலாநந்தர் 3. சிவவாக்கியர் 4. ஆறுமுகநாவலர்

18. பின்வருவனவற்றுள் சிவ விரதங்களில் அடங்காதது

1. சிவராத்திரி 2. கேதாரகௌரி நோன்பு 3. நவராத்திரி 4. திருவாதிரை

19. திருக்கோவில் முக்கியத்துவத்தினை உணர்த்துவது "கோயிலில்லா ஊரில் குடியிருக்க...

1. வேண்டும் 2. முடியும் 3. தக்கது 4. வேண்டாம்

20. பின்வருவனவற்றுள் ஆணவத்தின் குணங்களாக அமைபவை

1. மோகம், மதம், சஞ்சிதம்
2. சோஷம், விஷாதம், பிராரத்தம்
3. ஈதல், வாய்மை, இரக்கம்
4. மோகம், ராகம், வைசித்தரியம்

21. அழிந்து போகின்ற கூத்துக்கலையை ஊக்குவித்து மறுவாழ்வு கொடுத்தவர்

1. சேர்.பொன்.இராமநாதன் 3. சு.வித்தியானந்தன்
2. சு.இராசரத்தினம் 4. ந.ச.பொன்னம்பலப்பிள்ளை

22. சுன்னாகம் வரதபண்டிதர் பாடிய விரத நூலும், மருத்துவநூலும் முறையே

1. சிவராத்திரிபுராணம், ஏகாதசிபுராணம்
2. சிவராத்திரிபுராணம், அமுதாகரம்
3. சிவராத்திரிபுராணம், பிள்ளையார்கதை
4. பிள்ளையார்கதை, சித்திரபுத்தினார்கதை

23. மறைஞானசம்பந்தரின் 'சித்தாந்த ஞான போதம்' என்ற பிரமாண நூலின் மறுபெயர்

1. சைவசமயநெறி 2. சதமணிக்கோவை 3. சிவதர்மம் 4. திருவருட்பயன்

24. எள், கறுப்புத்துணி, நல்லெண்ணெய் என்பவற்றைத் தானம் செய்து அனுட்டிக்கப்படும் விரதம்

1. புரட்டாதி மகாளயம் 3. புரட்டாதிச்சனி
2. புரட்டாதி நவராத்திரி 4. புரட்டாதிப் பூரம்

25. கோட்டை நகரில் அமைந்திருந்த முருகன் கோயில் பற்றிய செய்திகளை அறிய உதவும் சான்று

1. வேல் சின்னம் நந்திக் கொடிகள் 3. சேவல் சின்னம் கொண்ட கொடிகள்
2. சேவலும் மயிலும் இணைந்த கொடிகள் 4. வேல் சின்னம் நடராஜக் கொடிகள்

26. நாவுக்கரசருக்கு குரு தீட்சை வழங்கியவர்

1. சிவபெருமான் 2. திலகவதியார் 3. மங்கையர்க்கரசியார் 4. புகழனார்

27. சிவனின் அட்ட வீரச் செயல்கள் இடம் பெற்ற தலம்

1. திருவீரட்டானேஸ்வரம் 3. திருக்கேதாரம்
2. திருப்பெருமணநல்லூர் 4. திருவாரூர்

28. தேர் வடிவமைக்கும் முறையைக் கூறும் நூல்

1. விஷ்ணுதர்மோத்திரம் 3. மானசாரம்
2. சில்பரத்தினம் 4. புராணம்

29. "சத்யம் வத" என்னும் உபநிடதக் கூற்று குறித்து நிற்கும் விழுமியம்

1. பொறுமை 2. ஈகை 3. அன்புடைமை 4. வாய்மை

30. "தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் செய்யப்படும் பூசைகளும் நற்செயல்களும் ஆன்மாக்களை நரகத்தினின்றும் காக்கும்" எனக் குறிப்பிடும் புராணம்

1. சிவபுராணம் 2. விஷ்ணு புராணம் 3. கருடபுராணம் 4. வாயுபுராணம்

31. உப ஆகமங்களின் எண்ணிக்கை

1. 28 2. 207 3. 110 4. 97

www.kopi.lk

32. சைவ சித்தாந்தம் குறிப்பிடும் மூவகை ஆன்மாக்கள்

1. பதி, பசு, பாசம் 3. சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்

2. ஆணவம், கன்மம், மாயை 4. மனம், வாக்கு, காயம்

33. கன்மேந்திரியங்களாவன

1. மெய், வாய், கண், மூக்கு, செவி 3. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

2. கை, கால், நா, எருவாய், கருவாய் 4. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்

34. "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" எனக் குறிப்பிடும் வழிபாடு

1. குருவழிபாடு 2. இலிங்கவழிபாடு 3. சங்கம வழிபாடு 4. ஆலயவழிபாடு

35. இந்து இல்லத்தை அடையாளப்படுத்துவன

1. துளசிமாடம், மாக்கோலம்

2. ஆஞ்சநேயர்படம், துளசிமாடம்

3. திருஷ்டி விநாயகர்படம், ஆஞ்சநேயர்படம்

4. நாய் கடிக்கும் கவனம் பதாகை, பூங்கொடிகள்

36. உலகப் பெருமஞ்சம் அமைந்துள்ள ஈழத்து ஆலயம்

1. நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம்

2. நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்

3. இணுவில் கந்தசுவாமி ஆலயம்

4. பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம்

37. சிவபெருமான் சிறு குழந்தையாக மண்டோதரியின் மடியில் (வேண்டுகோளுக்கு இணங்க) தவழ்ந்த கதையினைக் குறிப்பிடும் புராணம்

1. விஷ்ணுபுராணம் 3. திருக்கரசைப்புராணம்

2. உத்தரகோசமங்கை தலபுராணம் 4. தட்சணகைலாசபுராணம்

பின்வரும் தகவலை உடைய அட்டவணையிலிருந்து 38, 39, 40 ஆகிய வினாக்களுக்கான விடையைத் தெரிவு செய்க

A-மட்டிட்டபுன்னை	B-மெய்கண்டார்	C-மல்லிகை
D-தாமரை	E-பொற்றாளம் பெற்றமை	F-ஐப்பசி சுவாதி
G-சிவஞானபோதம்	H-வைகாசி மூலம்	I-கொன்றை

38. திருஞான சம்பந்தருடன் தொடர்புடைய தொகுதி

1. A,B,C 2. A,E,F 3. A,H,F 4. A,E,H

39. கொடிப்பூ, நீர்ப்பூ கோட்டுப்பூ என அமையும் தொகுதி

1. A,C,F 2. E,D,I 3. C,D,E 4. C,F,I

40. சந்தான குரவர்களுடன் தொடர்புடைய தொகுதி

1. B,E,I 2. A,G,H 3. B,G,F 4. B,H,I

(40X1 = 40)

www.ikeduk

10128

மாகாணக் கல்வித்திணைக்களம்
வடக்கு மாகாணம்
ஆண்டிறுதிப் பரீட்சை - 2019

தரம்:11	சைவநெறி	நேரம்: 3.00 மணித்தியாலம்

சுட்டெண்:.....	12	T	II	

கவனிக்க:

I. முதலாம் வினா கட்டாயமானது, ஏனைய வினாக்களிலிருந்து நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

II. முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

பகுதி – II

1. சுருக்கமான விடை எழுதுக.

01. திருமுறைகளில் விநாயகரைப் போற்றிப் பாடிய இருவரின் பெயரை எழுதுக.

02. நித்திய அன்னதானப்பணி இடம் பெறும் ஆலயங்கள் எவை?

03. விபூதியின் மறு பெயர்கள் இரண்டு எழுதுக.

04. நீங்கள் வாழ்வில் கடைப்பிடிக்கும் விழுமியங்கள் நான்கு எழுதுக.

05. கடமை விரதங்கள் எவை?

06. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?

07. உமாபதிசிவாச்சாரியார் பாடிய சிந்தாந்த அட்டகத்தில் அடங்கும் நூல்கள் நான்கு தருக.

08. நாகதம்பிரான் வழிபாட்டில் இடம்பெறும் சடங்குகள் நான்கு தருக.

09. நாட்டார் கலைகளை மெருகூட்டும் இசைக்கருவிகள் நான்கு தருக.

10. அட்டாங்க யோகத்துள் அடங்கும் படி நிலைகள் நான்கு தருக.

(10X2 = 20 புள்ளிகள்)

2.

01. கீழ்வரும் பாடல்களுள் **இரண்டினை** அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.
02. அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

1. "அந்தணாளன் உன்...."
2. "பால்நினைந்தூட்டும்....."
3. "கற்றவர் விழுங்கும்....."
4. "சிந்திக்கிலேன்....."
5. "உண்ணும் சோறும்....."

(5X2 = 10 புள்ளிகள்)

www.keou.lk

3. **"இந்த மாதவர் கூட்டத்தை எம்பிரான்**
அந்தம் இல்புகழ் ஆலால சுந்தரன்
சுந்தரத் திருத் தொண்டத் தொகைத் தமிழ்
வந்து பாடிய வண்ணம் உரை செய்வாம்"

01. இப்பாடல் இடம்பெறும் நூல், ஆசிரியர் பெயரினைக் குறிப்பிடுக.
02. இப்பாடலில் இடம் பெறும் சமயகுரவர், அவருடைய பதிகம் என்பவற்றைத் தருக?
03. இப்பாடல் இடம் பெறும் நூலில் கூறப்படும் சிவனடியார் சிறப்பினை விளக்கி எழுதுக.

(2+3+5= 10 புள்ளிகள்)

4. **"நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே....."**

01. இவரின் பெற்றோர் பெயர், பிறந்த இடம் என்பவற்றைக் குறிப்பிடுக.
02. இவர் **முதன்முதல்** பிரசங்கம் செய்த ஆலயம், காலம், முதலில் ஆரம்பித்த கல்வி நிலையம், காலம் என்பவற்றைக் குறிப்பிடுக.
03. நாவலருடைய சைவசமயப் பணிகள் மூன்றினை விளக்கி எழுதுக.

(2+3+5= 10 புள்ளிகள்)

5. **"இலங்கையில் சைவ சமயப் பாரம்பரியங்களைப் பேணிப்பாதுகாக்கும் நோக்கில் சைவ சமய நிறுவனங்கள் தோற்றம் பெற்றன"**

01. 19ம் நூற்றாண்டில் ஈழத்தில் தோற்றம் பெற்ற சமய நிறுவனங்கள் நான்கு தருக.
02. சைவ பரிபாலன சபையின் நோக்கங்கள் மூன்று எழுதுக.
03. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிகள் மூன்றினை விளக்கி எழுதுக.

(2+3+5= 10 புள்ளிகள்)

6. **"வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது"**

01. வாதவூரன் எனக் குறிப்பிடப்பட்ட சமயகுரவர் யார்? அவர் விளம்பிய நூல் எது?
02. இக்குரவர் நின்ற நெறி, மார்க்கம், முத்தி என்பவற்றைத் தருக.
03. மேற்குறிப்பிடப்பட்ட நாயனாரின் சமயப் பணிகள் மூன்றினை விளக்கமாக எழுதுக.

(2+3+5= 10 புள்ளிகள்)

7. **பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.**

01. நல்லூர்க் கந்தசுவாமி கோவில்
02. குங்கிலியக்கலய நாயனார்
03. ஈழத்தில் வைரவ வழிபாடு
04. மகோற்சவம்

(5X2 = 10 புள்ளிகள்)

www.kalvi.lk

மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

3ம் தவணைப்பரீட்சை – 2019 - விஞ்ஞானம்

நேரம் - 3 மணித்தியாலங்கள் | தரம் 11 | சுட்டெண்: .....

வினா எண் - பகுதி 2	பெற்ற புள்ளி
1	
2	
3	
4	
5	
6	
7	
8	
9	
மொத்தம்	

பகுதி 1	
பகுதி 2	
மொத்தம்	
இறுதிப் புள்ளி	

இங்கே எதையும் எழுத வேண்டாம்.

மதிப்பீட்டுப் பணிக்கானது.

பகுதி – 2 A

அமைப்புக் கட்டுரை வினாக்கள்

எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை அளிக்கவும்.

1) A.

அன்றாடம் வீடுகளில் பல்வேறு தேவைகளுக்காக வெவ்வேறு பதார்த்தங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுட் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை நன்கு அவதானித்துக் கீழுள்ள வினாக்களுக்கு விடை அளிக்கவும். (படங்கள் உண்மையான அளவிடைக்கு வரையப்படவில்லை.)



1. இங்கு தரப்பட்டுள்ள இயற்கையான அழகுசாதனப் பொருள் ஒன்றைக் குறிப்பிடுக.

.....(1)

2. முகப்பூசற் தோற்களிம்புகளில்(facial cream) அடங்கியுள்ள சேதனச் சேர்வைகள் தோலின் நிறத்தை மாற்றுகின்றன. அவ்வாறு நிறம் மாறுவதற்கான காரணம் யாதெனக் கூறுக. (2)

.....

www.ikeou.lk

3. முகப்பூசற்தோற் களிம்புகளை(கிறீம்) உபயோகிப்பதால் ஏற்படக்கூடிய ஒரு நோய் நிலைமையைக் குறிப்பிடுக.


.....(1)

4. வீடுகளில் மலசலகூடம் அடிக்கடி அதிகளவு பீனோல் இட்டுக் கழுவப்படுகிறது. இதனால் புவியில் இரசாயனக் கூறுகளை சக்கரமாகச் சுழற்சியடையச் செய்யும் ஒரு செயற்பாடு அதிகளவில் பாதிப்படைகிறது.

a. 'புவியில் இரசாயனக் கூறுகள் சக்கரமாகச் சுழற்சியடைதல்' சூழலியலில் எவ்வாறு குறிப்பிடப்படும் என்பதை உரிய கலைச்சொற்களினாற் குறிப்பிடுக.

.....(1)

b. அதிக பீனோல் பயன்பாடு இயற்கையான பதார்த்தச் சுழற்சிச் செயன்முறையை ஓரிடத்திற் குழப்புகின்றது. கீழுள்ள பாய்ச்சற் கோட்டுப்படத்தில் அது எவ்வாறு நிகழுகின்றது எனப் படிமுறைகளாற் காட்டப்பட்டுள்ளது. இதில் **இரு செயற்பாடுகள்** பூர்த்தி செய்யப்படாது உள்ளன. அவற்றை உரிய சொற்களால் பூர்த்தி செய்து முழுமைப்படுத்துக.



(2)

c. சாதாரண சவர்க்காரத்திற்குப் பதிலாக **அல்கைல் பென்சீன் சல்பனேற்று** கொண்ட அழுக்ககற்றிகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீங்கு ஒன்றைக் குறிப்பிடுக.

.....(1)

B.

அண்மையில் அமேசன் காட்டின் ஒரு பகுதி காட்டுத்தீயினால் அழிவடைந்துள்ளமை கீழே படத்திற்காட்டப்பட்டுள்ளது. அமேசன் காட்டில் காணப்படத்தக்க உணவுச் சங்கிலி ஒன்றும் கீழே தரப்பட்டுள்ளது.





1. இச்சங்கிலியிற் காணப்படும் உற்பத்தியாக்கி எதுவெனக் கூறுக.

.....(1)

2. இங்கு உணவுச்சங்கிலியின் ஊடாக போசணையின் மூலம் **இரசாயனச் சேர்வைகளும் சக்தியும்** செலுத்தப்படுகிறன. இவற்றுள் **ஒருதிசையில் மாத்திரம் செலுத்தப்படும் காரணி** எதுவெனக் கூறுக.


.....(1)

3. 'இயற்கையான காபன், நைதரசன் சக்கரங்களில் காட்டுத்தீ அதிகளவு பாதிப்பை ஏற்படுத்துகிறது' என்பதற்குத் தனித்தனியே **ஒவ்வொரு சந்தர்ப்பங்களை** எடுத்துக்காட்டுக.

காபன். .....(1)

நைதரசன். .....(1)

4.



அருகிலுள்ள வரைபில் காட்டுத்தீ ஏற்பட்டபின் சூழலில் மாற்றத்திற்குள்ளாகும் மூன்று காரணிகள் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் சரியாகக் காட்டப்பட்டிருக்கும் காரணியைத்தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிட்டுக் காட்டுக. (1)

5. வினா 4 இல் அவ்வாறு குறித்த காரணி மாற்றமுறுவதற்கான காரணமொன்றைக் குறிப்பிடுக.

(1)

.....

6. வினா**B** இல் மேற்கூறப்பட்ட காரணிகள் தவிர்ந்த காட்டுத்தீயினால் ஏற்படத்தக்க **உடனடிச் சூழலியற் பாதிப்பு** ஒன்றைக் குறிப்பிடுக.

(1)

.....

15

2) A.

இயற்கையான சூழலின் நிலைபேறான இயக்கத்தில் நுண்ணங்கிகளின் தொழிற்பாடு பாரிய அளவிற் பங்களிப்புச் செய்கின்றது. எனவே நுண்ணங்கிகளது இயல்புகளை ஆய்வு செய்தல் அவசியமானது.

1. **நுண்ணங்கிகளுடன்** தொடர்பான சில இயல்புகள் கீழே அட்டவணையிற் தரப்பட்டுள்ளன. அவை எந்தெந்த வகையான இயற்கைமுறைப் **பாகுபாட்டுக் கூட்டங்களுக்குரியன** என்பதை அருகிலுள்ள நிரலில் குறிப்பிடுக.

இயல்பு	பாகுபாட்டுக் கூட்டம்
Eg. தற்போசணி, இயூக்கரியோட்டாக் கரு கொண்டது	அல்கா/ புரோட்டீஸ்ரா
a. **தற்போசணி/பிறபோசணி, புரோக்கரியோட்டா கரு** கொண்டது.	.....
b. பிறபோசணிகள், **அழுகல் வளரி, தனி/ பல் கலத்தாலானவை**	.....
c. இலைக்கன்களை உருவாக்கும், **தற்போசணிகள்**	.....
d. பிறபோசணி, ஒட்டுண்ணி, **மலேரியா** நோயை ஏற்படுத்தும்	.....

(1x4)

2. மேற்தரப்பட்ட இயல்புகளில் கிளமிடோமோனசு நுண்ணங்கியின் இயல்பைத் தெரிவு செய்து எழுதுக.

(1)


.....

3. பெரும்பாலான நுண்ணங்கிகள் வித்திகளை உருவாக்கி இனம்பெருகும். ஆனால் இனப்பெருக்கத்திற்காக **வித்திகளை உருவாக்காத நுண்ணங்கிக் கூட்டம்** எது?

(1)

.....

B. தாவரமொன்றின் பூவுறுப்புகளிலிருந்து பல்வேறு கட்டங்களினூடாக நடைபெறும் ஒரு உயிர்ச் செயற்பாடு கீழே காட்டப்பட்டுள்ளது.



www.ikeduk

1. மேலே காட்டப்பட்டுள்ள உயிர்ச்செயற்பாட்டைப் பெயரிடுக.

.....(1)

2. பூவரும்பு நிலையில் பூவின் உட்புறத்தைப் பாதுகாக்கும் பகுதிகள் இரண்டைக் (இங்கு காட்டப்படாத) குறிப்பிடுக.

.....(1x2)

3. இங்கு பூர்த்தி செய்யப்படாதுள்ள a, b கட்டங்களைப் பூர்த்தி செய்க.

a. ..... b. .....(1x2)

4. மகரந்தச்சேர்க்கையின் பின் நுகம் தோன்ற முன்னர் நடைபெறும் ஒரு பிரதான செயற்பாடு இங்கு காட்டப்படவில்லை. அச்செயற்பாட்டைக் குறிப்பிடுக.

.....(1)

5. 

இங்கு உருவாகும் வித்து சிறிது காலத்திற்குக் களஞ்சியப்படுத்தி வைத்த பின்னர் முளைக்க விடப்பட்டது. அது முளைத்துப் புதிய தாவரத்தை உருவாக்கும் விதம் அருகிலுள்ள படத்திற் காட்டப்பட்டுள்ளது.

a. வித்து முளைக்கும் போது **வித்தில் நிகழும்** அவதானிக்கக்கூடிய மாற்றமொன்றைக் குறிப்பிடுக.

.....(1)

b. இம்முளைத்தற் செயற்பாட்டில் உருவாகும் வேர் **ஆணிவேரா/ நாருருவேரா** எனக் கூறுக.

.....(1)

c. இவ்வித்து சிறிது காலத்திற்குக் களஞ்சியப்படுத்தி வைத்த பின்னர் முளைக்கவிடப்பட்டதற்கான காரணத்தைக் குறிப்பிடுக? (1)

..... 15

3) **A.**

இரசாயன ஆய்வுகூடமொன்றிற் காணப்படும் சில பதார்த்தங்களும், திரவியங்களும் கீழே தரப்பட்டுள்ளன. கீழுள்ள சந்தர்ப்பங்களுக்குத் தேவைப்படுபவற்றை அவற்றிலிருந்து பொருத்தமாகத் தெரிவு செய்து விடப்பட்டுள்ள கோட்டில் எழுதுக.

$CuSO_{4(aq)}$,	$H_2O_{(l)}$,	$Mg_{(s)}$,	$Na_2CO_{3(s)}$,	$C_{(s)}$,	$Cu_{(s)}$

1. அமிலமொன்றை ஐதாக்குதல் .....
2. இரும்புக் கரண்டிக்கு முலாமிடத் தேவையான பதார்த்தச் சோடி .....
3. இரும்பைத் துருப்பிடியாது கதோட்பாதுகாப்பில் வைக்க உதவும் திரவியம் .....
4. மின்வாயாகப் பயன்படுத்தக்கூடிய அல்லுலோகம் .....
5. சிறந்த கரைப்பானாகப் பயன்படுத்தக்கூடிய பதார்த்தம் .....(1x5)

www.keoul.k

6. Mg இனது அணுஎண், வலுவளவு என்பவற்றைக் குறிப்பிடுக.

(1x2)


அணுஎன். ..... வலுவளவு .....

7. Mg துண்டை $CuSO_{4(aq)}$ இனுள் இடும்போது நடைபெறும் இரசாயனத் தாக்கத்தை எழுதுக.

(2)

.....

B. கனிய எண்ணெய்யின் கூறுகளைப் பிரித்தெடுக்கும் உபகரணத்தின் அமைப்பு படத்திற் காட்டப்பட்டுள்ளது. அதிலிருந்து பிரித்தெடுக்கப்படும் கூறுகளிற் சிலவும் தரப்பட்டுள்ளன.




1. கனிய எண்ணெய்யின் கூறுகளைப் பிரித்தெடுக்கும் **பிரித்தெடுப்பு நுட்பமுறை** எதுவெனக் கூறுக.

(1)

.....

2. இங்கு தரப்பட்டுள்ள கனிய எண்ணெய்யின் கூறுகள் ஐதரோகாபன்கள் ஆகும். ஐதரோகாபன்களிற் காணப்படும் **இரசாயனப் பிணைப்பு வகையைக்** கூறுக.

(1)



3. அருகிற் காட்டப்பட்டுள்ள ஐதரோகாபன் மேற்தரப்பட்டுள்ள கூறுகளுள் எதனது கட்டமைப்பு எனக் கூறுக.

(1)

.....

4. இவ் ஐதரோகாபன் சேர்வையில் ஐதரசன் அணுக்கள் இரண்டு அகற்றப்படும்போது உருவாகும் சேர்வையின் கட்டமைப்பைக் கீழுள்ள பெட்டியினுள் வரைந்து அச்சேர்வையிலுள்ள பிணைப்பு கள் தொடர்பான அட்டவணையையும் நிரப்புக.


..... கட்டமைப்பு	பிணைப்பு	எண்ணிக்கை
	a. **C – C** இடையிலுள்ள இரட்டைப்பிணைப்பு	.....
	a. C – H ஒற்றைப் பிணைப்பு	.....

(1 + 1 + 1)

15

4. A.

ஒளிக்கதிரொன்று ஒரு ஒளியியல் உபகரணத்திற் படுவதைப் படம் காட்டுகிறது. கீழுள்ள வினாக்கள் இதன் அடிப்படையில் அமைந்துள்ளன.



1. இங்கு காட்டப்பட்டுள்ள ஒளியியல் உபகரணத்தைப் பெயரிட்டு ஒளிக்கதிரின் பயணப்பாதையைப் பூர்த்தி செய்க.. (1 + 1)

ஒளியியல் உபகரணத்தின் பெயர் .....

2. இங்கு ஒளிக்கதிரின் பயணப்பாதை மாற்றமடையும் தோற்றப்பாட்டைப் பெயரிடுக.

(1)

.....

www.ikeju.lk

3. இவ்வொளியியல் உபகரணம் ஒளிக்கதிரின் பாதையை மாற்றிக்கொள்ளுதலின்போது அதனுடன் தொடர்புபடும் கோணங்களையும் படத்திற் குறிக்க.


.....(1 + 1)

4. வினா 3 இல் நீர் குறிப்பிட்ட ஒளிக்கதிரமைக்கும் கோணங்களுக்கிடையிலான தொடர்பை எழுதுக.

.....(1)

B.

கீழுள்ள படத்தில் ஒலிபெருக்கி ஒன்றின் மூலம் வெளிவிடப்படும் ஒலிஅலை வளியில் ஊடுகடத்தப்பட்டுச் செவியை அடையும் செயற்பாடு காட்டப்பட்டுள்ளது.



1. அலையியக்கத்திற்கு ஊடகத்துணிக்கைகளின் பங்குபற்றுகை அவசியமான அலைவகை, எவ்வாறு பெயரிடப்படுமெனக் கீழ்தரப்படும் அலைவகைகளுட் தெரிவு செய்து கோடிடுக. (1)

I. நெட்டாங்கு அலை II. குறுக்கலை III. பொறிமுறைஅலை


2. இங்கு அலை கடத்தப்படுகையில் குறித்த கணமொன்றில் வளித்துணிக்கைகள் காணப்படும் விதம் A, B எனக் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றை உரிய கலைச்சொற்களாற் பெயரிடுக.

A. ..... B. .....(2)

3. இங்கு வெளிவிடப்படும் அலையின் **உரப்பு அதிகரிக்கும்போது** வளித்துணிக்கைகள் முன் பின்னாக அதிரும் இடப்பெயர்ச்சி l எங்ஙனம் மாற்றமடையும் எனக் குறிப்பிடுக.

.....(1)

4. இங்கு தரப்பட்டுள்ள வரைபு உரப்புக் குறைந்த அலைக்குரியதாகும். இதில் உரப்பு அதிகரிக்கப்பட்ட அலைக்குரிய வரைபையும் வரைக. (ஏனைய பௌதிகக் காரணிகள் மாறவில்லை எனக் கொள்க)



(1)

5. அலையின் செலுத்துகைக்கு ஊடகம் அவசியமற்ற **அலைவகைகள்** பொதுவாக எவ்வாறு அழைக்கப்படும் எனக் கூறுக.

.....(1)

6. **ஒளியலை** பயணிக்கக்கூடிய திண்ம ஊடகமொன்றைக் கூறுக.

.....(1)

C. பின்வரும் கூற்றுக்கள் **சரியா/ தவறா** எனக்குறிப்பிடுக. (1+ 1)

1. ஊடகமொன்றில் **ஒளியின்வேகம்** ஒலியினது வேகத்தைவிடவும் **அதிகமாகும்.** (.....)
2. **ஒலியின் வேகம் வாயு ஊடகத்தில்** திண்ம ஊடகத்தைவிடவும் **குறைவாகும்.** (.....)

15


www.ikeou.lk

பகுதி 2 B - கட்டுரை வினாக்கள்

விரும்பிய மூன்று வினாக்களுக்கு விடை தருக.


5. A.

கீழுள்ள கோட்டுப் படத்தில் மனித உடலின் சுற்றோட்டத் தொகுதியின் ஒருபகுதி காட்டப்பட்டுள்ளது. இங்கு **X** எனக் காட்டப்பட்டுள்ளது நுரையீரல் ஆகும். அது தொடர்பாக அடுத்துவரும் வினாக்கள் அமைந்துள்ளன.



1. அங்கம் **X** இற்குக் குருதி செலுத்தப்படும் சுற்றோட்டம் எவ்வாறு அழைக்கப்படுகிறது எனக் கூறுக.
2. இதன்போது குருதியானது **B** இலிருந்து பாய்ச்சப்பட்டு மீண்டும் **C** ஐ வந்தடையும் வரையான பாதையை அமைக்கும் குருதிக்கலன்களை ஒழுங்காகப் பெயரிடுக.
3. நுரையீரலினுள் பதார்த்தப் பரிமாற்றம் நிகழும் மேற்பாப்ப எவ்வாறு குறிப்பிடப்படுமெனக் கூறுக.
4. நீர் வினா 5 இற்குறிப்பிட்ட மேற்பரப்பு பதார்த்தப் பரிமாற்றலுக்காகக் கொண்டுள்ள சிறப்பியல்புகள் இரண்டை விபரிக்க.
5. இங்கு பதார்த்தப் பரிமாற்றல் நிகழும் முறை எதுவெனக் கூறுக.
6. ஒவ்வாமையினால் அஸ்மா நோய் ஏற்படுகின்றது. அஸ்மாவின்போது உடலில் ஏற்படும் மாற்றங்களைச் சுருக்கமாக விளக்குக.

B.



கலச்சுவாசத்தில் உள்ளெடுக்கப்படும் வாயுவை எடுத்துக்காட்டுவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட சோதனையைப் படம் காட்டுகின்றது. இங்கு சோதனை **I** இல் **X** எனும் இரசாயனப் பதார்த்தம் படத்திலுள்ளவாறு வைக்கப்பட்டுள்ளது.

1. பதார்த்தம் **X** எச்சேர்வை எனக் குறிப்பிட்டு அது எடுக்கப்பட்டதற்கான காரணத்தையும் கூறுக.
2. இவ்விரு சோதனை அமைப்புக்களிலும் ஏற்படும் மாற்றங்களைத் தனித்தனியே எழுதுக.
3. கலச்சுவாசம் நடைபெறும் **கலப்புன்னங்கத்தைப்** பெயரிடுக.
4. முள்ளந்தண்டுள்ள விலங்குகளிற் காணப்படும் வன்கூட்டுத் தசையிழையக்கலங்களின் சுவாசம் தொடர்பாகக் கீழுள்ள வினாக்கள் அமைந்துள்ளன.
   a. வன்கூட்டுத்தசையிழையத்தில் அதிகளவில் கலச்சுவாசம் நடைபெறும். இதற்கான காரணத்தைச் சுருக்கமாக விளக்குக.
   b. காற்றுள்ள நிலைமைகளில் இங்கு நிகழும் கலச்சுவாசத்திற்கான சமன்பாட்டை எழுதுக.
   c. கலங்களில் கலச்சுவாசக் கழிவுகள் CO_2 உம் H_2O உம் ஆகும். இவை தவிரப் புரதங்கள் உடைக்கப்படும்போது கலங்களில் உருவாகும் கழிவு ஒன்றைக் குறிப்பிடுக.

www.KeeBook

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

தரம் 05

தமிழ்	வியாழன் 7.00 - 8.00 pm சனி 6.15 - 7.15 pm
கணிதம்	சனி மற்றும் ஞாயிறு 6.00 - 7.00 am
சுற்றாடல்	செவ்வாய் மற்றும் வெள்ளி 7.00 - 8.00 pm
ஆங்கிலம்	புதன் 6.00 - 7.00 pm
சிங்களம்	வியாழன் 6.15 -7.15 pm
நுண்ணறிவு	சனி மற்றும் ஞாயிறு 7.15 - 8.15 pm

76667-4945

6. A.

வளிமண்டலத்தில் அதிக சதவீதத்தில் காணப்படும் ஒரு ஈரணு வாயு நைதரசனாகும். நைதரசன், அதனைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் அமோனியாவாயு என்பவற்றைப் பற்றிக் கீழுள்ள வினாக்கள் அமைந்துள்ளன.

1. நைதரசன் மூலகத்தின் இரசாயனக் குறியீட்டையும் நைதரசன் வாயுவின் மூலக்கூற்றுச் சூத்திரத்தையும் எழுதுக.
2. நைதரசன்வாயு மின்குமிழ்களை நிரப்பும் வாயுவாகப் பயன்படுத்தப்படுவதற்கான காரணம் யாதெனக் கூறுக.
3. **நைதரசன் வாயு** விசேட நிபந்தனையின் கீழ் **ஐதரசன் வாயுவுடன்** தாக்கமடைய விடப்படும் போது **அமோனியா வாயு** உருவாகும். கைத்தொழிற்றுறையில் அமோனியா வாயுவை ஒட்சிஏற்றுவதன் மூலம் **நைத்திரிக் அமிலம்** தயாரிக்கப்படும்.
   a. மேற்படி அமோனியா வாயு உருவாகும் இரசாயனத் தாக்கத்தைக் குறியீட்டில் எழுதுக.
   b. நைத்திரிக் அமிலத் தயாரிப்புச் செயன்முறையில் ஊக்கியாக பிளாற்றினம் பயன்படுத்தப்படுகிறது. இங்கு பிளாற்றினத்தின் தொழிற்பாட்டை விளக்குக.
   c. பிளாற்றினம் ஆபரண உற்பத்தியில் மிகவும் பெறுமதி வாய்ந்த உலோகமாகக் காணப்படுகிறது. அவ்வாறு காணப்படுவதற்கான காரணமொன்றைக் கூறுக.
   d. ஆபரண உற்பத்தியில் பயன்படும் பிளாற்றினம் தவிர்ந்த பெறுமதிமிக்க வேறொரு உலோகத்தைக் கூறுக.

B.

1. அமிலங்கள் சிலவும் அன்றாட வாழ்வில் அவை பயன்படும் சந்தர்ப்பங்கள் சிலவும் கீழே தரப்படுகின்றன. இங்கு குறித்த சந்தர்ப்பங்களிற் பயன்படுத்தப்படும் அமிலங்கள் எவையெனத் தரப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமாகத் தெரிவு செய்க.

சல்பூரிக்கமிலம்	**ஐதரோக்குளோரிக்கமிலம்**	**அசற்றிக்கமிலம்**	**காபோனிக்கமிலம்**

சந்தர்ப்பம்	**பயன்படுத்தப்படும் அமிலம்**
1. பிளாற்றினத்தைக் கரைக்கும் அரசநீர் தயாரிப்பு	a. .....
2. வினாகிரி தயாரிப்பு	b. .....
3. ஈயசேமிப்பு மின்கலத்தின் மின்பகுபொருள்	c. .....


2. பொதுவாக ஆய்வுகூடத்தில் அமிலங்களை இனங்காண உதவும் பொருட்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன எனக்கூறுக.
3. $0.5 moldm^{-3}$ செறிவையும் $1dm^3$ கனவளவையும் கொண்ட $H_2SO_{4(aq)}$ கரைசலில் காணப்படும் H_2SO_4 இனது மூல் எண்ணிக்கையைக் கணிக்க.
4. H_2SO_4 ஆனது நீர்க்கரைசலில் அயனக்கமடைவதற்கான சமன்பாடு கீழே காட்டப்பட்டுள்ளது. அதன்படி கரைசலிற் காணப்படும் H^+ அயன்களின் மூல் எண்ணிக்கையைக் கணிக்க.

$$H_2SO_{4(aq)} \longrightarrow 2H^+_{(aq)} + SO_4^{2-}{}_{(aq)}$$

5. இங்கு $H_2SO_{4(aq)}$ இனது அயனாக்கத்தில் தோன்றும் இரு அயன்களில் அதனது அமில இயல்புக்குக் காரணமான அயனைத் தெரிவு செய்க.

7. A.

கடத்திக் கம்பி ஒன்றின் தடை அதனது நீளத்திற் தங்கியிருக்கும் என்பதைச் சோதிக்க வேண்டியுள்ளது. இதற்குத் தேவையான உபகரண ஒழுங்கமைப்பும் பின்வரும் பொருட்களும் தரப்பட்டுள்ளன. இங்கு மின்கலத்தின் அழுத்தவேறுபாடு **1.5V** ஆகும்.



- 2mm விட்டமுடைய மங்கனின் கம்பியில் 10.5cm துண்டு
- 2mm விட்டமுடைய மங்கனின் கம்பியில் 21cm துண்டு
- 1mm விட்டமுடைய செப்புக் கம்பியில் 10.5cm துண்டு
- 2mm விட்டமுடைய செப்புக் கம்பியில் 21cm துண்டு.

கம்பியைப் பொருத்தும் முடிவிடங்களைக் கொண்ட பலகை


1. மேலுள்ளவற்றுள் மேற்படி சோதனைக்கு அவசியமான கம்பித் துண்டுகளை மாத்திரம் தெரிவு செய்து எழுதுக.
2. படத்தில் காட்டப்பட்டுள்ள மின்சுற்றைக் குறியீட்டில் வரைக.
3. இதன்போது நீளத்துடன் தடை மாறுவதைத் தெளிவாக ஒப்பிட்டு வேறுபடுத்த முடியவில்லை எனின் இதற்காகச் சுற்றில் மேலதிகமாக இணைக்கத்தக்க உபகரணமொன்றைக் குறிப்பிடுக.
4. வினா 3 இல் நீர் கூறிய உபகரணத்தின் வாசிப்பு ஒரு சந்தர்ப்பத்தில் நியம அலகில் **1** எனின் அச்சந்தர்ப்பத்திற்றொழிற்படும் தடையின் பருமனைக் கணிக்க.
5. இச்சோதனையிலிருந்து கடத்திக் கம்பி ஒன்றின் தடை நீளத்துடன் எங்ஙனம் மாற்றமடையும் என முடிவு செய்யலாம்?

B.



மின்கேத்தல் ஒன்று மின்னிணைப்பிலுள்ளதைப் படம் காட்டுகின்றது. கேத்தலினுள் 1kg நீரானது 20^0C இலிருந்து 100^0C வரை சூடாக்கப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் கேத்தலின் கைபிடியைத் தொடும்போது சூடு உணரப்படாத அதேவேளை கேத்தலின் உடலைத் தொடும்போது கடுமையான சூடு உணரப்பட்டது. இவை தொடர்பாக இனிவரும் வினாக்கள் அமைந்துள்ளன.

1. கேத்தலின் **கைபிடியும்** கேத்தலின் **உடலும்** 'வெப்பத்தை இடம்மாற்றுந் தன்மையில்' ஒன்றிலிருந்தொன்று பெரிதும் வேறுபட்டிருக்கின்றன. 'வெப்பத்தை இடம்மாற்றும் தன்மையின் அடிப்படையில்' இப்பகுதிகளிரண்டையும் **உரிய கலைச்சொற்களால் பெயரிட்டு** வேறுபடுத்திக் காட்டுக.
2. இங்கு கேத்தலினது உடற் திரவியம் கொண்டுள்ள **'வெப்பசக்தி'** என்பது, அத்திரவியத்தை ஆக்கும் துணிக்கைகள் கொண்டுள்ள **எந்த சக்தியையாகும்** எனக் குறிப்பிடுக.
3. மின்கேத்தலின் உடல் மேற்பரப்பு மினுமினுப்பாகக் காணப்படும். இம்மினுக்கமான தன்மை பொதுவாக எந்த முறையில் நடைபெறும் வெப்பஇடம்மாற்றத்தைக் கட்டுப்படுத்துகின்றது?
4. மினுக்கமான மேற்பரப்பின் மூலம் இக்கட்டுப்படுத்தற் செயன்முறை எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறதெனச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
5. மின்கேத்தலினுள் வெப்பத்தைப் பிறப்பிக்கும் கம்பி சுருள்முறுக்குகளைக் கொண்டிருப்பதன் ஒரு முக்கியத்துவத்தை விளக்குக.
6. இங்கு நீர்பெற்ற வெப்ப சக்தியினளவைக் கணிக்க. (நீரின் தன்வெப்பக் கொள்ளளவு $4200 Jkg^{-1}\ ^0C^{-1}$)



7. நேரத்துடன் நீரின் வெப்பநிலை உயர்வுக்கான வரைபு அருகிற் தரப்பட்டுள்ளது. 100^0C வெப்பநிலையை அடைந்த பின்னரும் மின் வழங்கப்படும்போது நீரின் வெப்பநிலை எவ்வாறு காணப்படுமென வரைபிற் காட்டுக. (இதற்கு வரைபை உமது விடைத்தாளிற் பிரதி செய்க)

8. **A.**

அங்கிகளின் உடலில் தலைமுறையுரிமை அடையத்தக்க இயல்புகள் **DNA** மூலக்கூறுகளிற் களஞ்சியப்படுத்தப்பட்டு நிறமூர்த்தங்களாற் காவப்படுகின்றது. இவ்வுயிர்த்தொழிற்பாடு தொடர்பாக இனிவரும் வினாக்கள் அமைந்துள்ளன.

1. DNA மூலக்கூறொன்றை ஆக்கும் மூலகங்கள் எவை எனக் கூறுக.
2. DNA மூலக்கூறொன்றை ஆக்கும் அடிப்படை அலகை எழுதுக.
3. DNA மூலக்கூறிலுள்ள **பென்ரோஸ்வெல்லம்** எந்த உயிரியல் மூலக்கூற்று வகையைச் சேர்ந்தது எனக்கூறுக.
4. மனித உடற்கலமொன்றிற் காணப்படும் நிறமூர்த்தச்சோடிகளின் எண்ணிக்கை யாது?
5. மனிதனிற் காணப்படும் இலிங்கமிணைந்த தலைமுறையுரிமை அடையத்தக்க நோய் ஒன்றைக் குறிப்பிடுக.
6. நீரிழிவு நோயாளி ஒருவருக்குச் செயற்கையாக உற்பத்தி செய்யப்பட்ட இன்சுலின் ஓமோன் எதற்காக ஏற்றப்படுகிறது எனச் சுருக்கமாக விளக்குக.
7. வினா 6 இற் குறிப்பிடப்பட்ட செயற்கை இன்சுலின் ஓமோன் உற்பத்தியில் பரம்பரையலகுத் தொழிநுட்பவியல் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது எனச் சுருக்கமாக விளக்குக.


www.ikuthal.lk

B.

இரவுநேர விளையாட்டுப் போட்டி ஒன்றிற்காக மைதானத்தில் மேற்கொள்ளப்பட்ட சில செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைக் கருதி அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

A. **LED** மின்குமிழ்களால் மைதானத்தை ஒளியூட்டுதல்
B. மின்மோட்டர் ஒன்றினால் நீரிறைத்து மைதான நிலத்தை ஈரப்படுத்தல்
C. தகவல்களை வழங்க ஒலிபெருக்கி பொருத்தப்படல்
D. களிப்பூட்டுவதற்கு பலூன்களில் வாயுவை நிரப்பிக்கட்டியபின் மேலே பறக்கவிடுதல்

1. மேலே நிலையான காந்தத்தால் ஆக்கப்பட்ட சாதனங்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களைக் தெரிவு செய்க.
2. ஒலிபெருக்கி, மின்மோட்டர் இரண்டிலும் மின்சக்தி எச்சக்தியாக மாற்றப்படுகிறது எனக் கூறுக.
3. பலூன் மேல்நோக்கி இயங்குவதுடன் தொடர்புள்ள நியூட்டனின் விதியைக் கூறுக.
4. வாயுநிரம்பிய **0.3kg** திணிவைக் கொண்ட பலூன் நிலைக்குத்தாக மேல்நோக்கிச் செல்லுவதற்கு வளியினால் விளையுள்விசையாக ஏற்படுத்தப்பட்ட மேலுதைப்பு விசையைக் கணிக்க. (புவியீர்ப்பு ஆர்முடுகல் $10ms^{-2}$)
5. ஒளியைப் பெறுவதற்கு **LED விளக்குகளைப்** பயன்படுத்துவதன் ஒரு நன்மையைக் கூறுக.



6. ஒளியைப் பெறுவதற்கு மட்டுமன்றி ஆடலோட்ட மின்னை நேரோட்டமாக மாற்றுவதற்கும் LEDக்கள் பயன்படுத்தப்படலாம். இதன்போது அமைக்கப்படும் பாலச்சுற்றின் ஒருபகுதி அருகிற் தரப்பட்டுள்ளது. அதில் இணைக்கவேண்டிய **LED** க்களைப் **பொருத்தமாக முடிவிடங்களைக்** கவனித்து வரைக. (இதற்குத் தரப்பட்டுள்ள சுற்றை விடைத்தாளிற் பிரதி செய்து கொள்க. இங்கு **LED**க்கள் குறியீட்டினாற் காட்டப்பட வேண்டும்.)

6. இதன்போது கிடைக்கும் பயப்பு மின்னோட்டத்தை **ஒப்பமாக்குவதற்கு** மேலதிகமாக எந்த உபகரணம் தேவைப்படுமெனக் கூறுக.

9. A.

கடற்கரையை அண்டிய இரசாயனத் தொழிற்சாலை ஒன்றில் கடல்நீரை மூலப்பொருளாகப் பயன்படுத்திச் சில பதார்த்தங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. **சோடியம், ஐதரசன், குளோரின், கல்சியம் சல்பேற்று, கறியுப்பு** என்பன அவற்றுட் சிலவாகும்.

1. இங்கு தரப்பட்டுள்ளவற்றுள் கடல்நீரிற் காணப்படும் இரண்டு பிரதான சேர்வைகளை இரசாயனக் குறியீட்டில் எழுதுக.
2. இங்கு வாயுநிலையில் உற்பத்தி செய்யப்படும் மூலக்கூறுகளிரண்டும் எதுவாக இருக்கலாம்?
3. அன்றாட வாழ்வில் கறியுப்பைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களிரண்டைக் கூறுக.
4. கரைசல் ஒன்று தயாரிப்பதற்குத் தூய கறியுப்புப்பில் 4 மூல்கள் தேவைப்படுகிறது எனின் நிறுத்து எடுக்கப்படவேண்டிய தூயகறியுப்பின் திணிவைக் கணிக்க. (Na – 23, Cl – 35.5)
5. இங்கு தரப்பட்டுள்ள உற்பத்திச் செயன்முறைகளில் மின்பகுப்பைப் பயன்படுத்துவதன் மூலம் பெறத்தக்க உற்பத்திகள் **இரண்டைத்** தெரிவுசெய்து மின்வாய்களில் அவை உருவாகும்போது நிகழும் **அரைஅயன் சமன்பாடுகளை** எழுதிக்காட்டுக.

B.



தள்ளுவண்டி ஒன்றைப் பெண்ணொருவர் மணலான பாதையிற் தள்ளிச் செல்லுவது படத்திற் காட்டப்பட்டுள்ளது. அதனை அவதானித்துக் கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

1. வண்டியின் சில்லுகள் சுழலும்போது 'கிறீச்' எனும் ஒலியை எழுப்பின. இவ்வாறு ஒலி உருவாகுவதற்குக் காரணம் யாதாக இருக்கலாம் எனக்கூறுக.
2. அவ்வொலியைக் குறைப்பதற்கு உம்மால் செய்யத்தக்க மாற்றம் ஒன்றைக் கூறுக.
3. இங்கு பெண் **100m** தூரத்திற்கு **200N** விசையைப் பிரயோகித்து வண்டியைத் தள்ளிச் செல்லுகின்றார் எனின் அவராற் செய்யப்பட்ட வேலையைக் கணிக்க.
4. 'கிறீச்' ஒலி தோன்றும்போதுள்ள சந்தர்ப்பத்திலா/ ஒலி குறைக்கப்பட்ட சந்தர்ப்பத்திலா தள்ளிச் செல்லுதல் இலகுவாகக் காணப்படுமெனக் கூறுக.
5. வினா 4 இல் உமது விடைக்கான காரணத்தைச் சுருக்கமாக விளக்குக.
6. இங்கு பெண் ஒற்றைக்காலில் நிற்கும் சந்தர்ப்பத்தில் அவரது பாதம் மண்ணினுட் சிறிதளவு புதைந்து காணப்பட்டது. இவ்வாறு பாதம் புதையும் அளவுடன் தொடர்புபடும் பௌதிகக் கணியம்/ கணியங்களைக் குறிப்பிடுக.
7. இச்சந்தர்ப்பத்தில் பெண்ணின் பாதம் மண்ணினுட் புதையும் அளவைக் குறைக்க வேண்டுமெனில் அவரது பாதணிகளில் மாற்றத்தைச் செய்யலாம். இது எவ்வாறு நிகழுமென்பதைச் சுருக்கமாக விளக்குக.

www.lkedu.lk

மாகாணக் கல்வித்திணைக்களம்
வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணைப்பரீட்சை - 2019

தரம்:11 | தமிழ் இலக்கிய நயம் | நேரம்: 3 மணி10 நிமிடம்

சுட்டெண்:..... | 48 | T | I.II.III

பகுதி I இல் 1, 2 ஆகிய இரு வினாக்களுக்கும் பகுதி II இல் 3ஆம் வினாவுக்கும் பகுதி III இல் உள்ள 4,5, 6, 7 ஆகியவினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமென எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி I

01. 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமாக விடை தருக

1. "செய்செய் நான் எதைச் செய்தேனோ அதைத்தானே நீயும் செய்துகிட்டுவர்றே." துணிஞ்சு செய். இன்னும் ஒருவாரம் இப்படியே செய்தீன்னா தன்னாலே எல்லாம் சரியாகப் போகும்"

   அ. துணிந்துசெய்யுமாறு கூறப்படும் செயல் எது?

   ஆ. "தன்னாலே எல்லாம் சரியாகப் போகும்" என்று கூறப்படும் விடயம் என்ன?

2. "சொன்னஎல்லையின் ஊங்கினும் தூங்கினான்
   மன்னன் வந்திலன் என்செய்தவாறுஅரோ?"

   அ. சொன்னஎல்லையாது?

   ஆ. வந்திலன் என்றுசுட்டப்படும் மன்னன் யார்?

3. "குற்ற உணர்வு, குறுகுறுக்கும் நெஞ்சோடு இனிஎன்னால் ஊர் உலாப் போகமுடியாது மேலிடத்துக்கு மழையைக் காரணம் காட்டிச்சமாளிக்கலாம்."

   அ. குற்றஉணர்வும் குறுகுறுப்பும் ஏற்படக்காரணம் என்ன?

   ஆ. ஊர் உலாப்போகவேண்டி இருப்பதற்கான தேவை என்ன?

4. "ஆறலைக் கள்வர் படைவிடஅருளின்
   மாறுதலைபெயர்க்கும் மருவின் பாலை"

   அ. பாலைப்பண்ணின் இயல்பாகக் கூறப்படுவதுஎது?

   ஆ. இப்பாடலடிகள் எந்த நூலில் இடம்பெற்றுள்ளன?

www.ikeu.lk



புலமைப்பரிசில் வகுப்பு

தரம் 04 – 2025

ஆரம்பம் :- 14-09-2024

திங்கள்	வினாத்தாள் வகுப்பு 7.15 pm - 8.15 pm (பகுதி 1)
புதன்	வினாத்தாள் வகுப்பு 7.15 pm - 8.15 pm (பகுதி 2)
சனி	நுண்ணறிவு 6.15 pm - 7.15 pm
ஞாயிறு	நுண்ணறிவு 6.15 pm - 7.15 pm

மாதம் ஒன்றிற்கான கட்டணம்

1200/= மட்டும்

புலமைப்பரிசில் வகுப்பு

தரம் 05 – 2025



திங்கள்	வினாத்தாள் வகுப்பு 7.15 pm (பகுதி 1)
புதன்	வினாத்தாள் வகுப்பு 7.15 pm (பகுதி 2)
சனி	நுண்ணறிவு 7.15 pm - 8.15 pm
ஞாயிறு	நுண்ணறிவு 7.15 pm - 8.15 pm

ஆரம்பம்

கட்டணம் - 1500/=

5. அலகுவாள்விழிஆயிழைநன்னுதல்
திலகம் கண்டுசெஞ்சிலைமாரனும்

அ. நன்னுதல் என்றுசுட்டப்படுவதுயாது?

ஆ. செஞ்சிலைமாரன் யார்?

(5 x 4 = 20புள்ளிகள்)

02. கீழ்வரும் பாடற்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தங்கவளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக் கமழுதையா - இதில்
அங்கமெலாம்மிகப் பொங்கிவழிந்திடும்
அன்பும் கலந்ததையா

கொட்டியஉப்புக் கசப்பதென் றாலுமுள்
கூடி இனிக்குதையா - இது
விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீர்பட்ட
விண்ணின் அமுதமையா

சொன்னபடிநடவாததுடிப்பயல்
தொட்டுச் சுவைத்ததையா - இது
சின்னஞ் சிறுகைக் குழந்தைஅளைந்தது
தெய்வஅமுதமையா

ஆகக் கரிந்துபொரிந்ததென்றாலுமே
அன்புமணக்குதையா - இது
வேகவைக்காததென்றாலும் எனக்கொரு
விந்தைஉருசிஐயா

ஊது குழற்சத்தம் கேட்டவதிப்பட்டு
ஓடிவருகையிலே - இது
பாதிவழிவந்துதாமரைக் கைதந்த
பச்சைஅமுதமையா

1. குறைகளையும் நிறைகளாகக் காணும் கணவனின் அன்பு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?
2. தந்தைதன் பிள்ளைமீதுகொண்டஅன்புவெளிப்படுத்தப்படும் வகையைவிளக்குக.
3. மனைவியின் பிரிவுத்துயர் எவ்வாறுவெளிப்படுத்தப்படுகின்றது?
4. மனைவியின் சமையல் தாமதமாகிவிட்டதுஎனக் கருதுகிறீரா? பாடலின் எப்பகுதிஅதற்கு ஆதாரமாகிறது?
5. இப்பாடலில் இடம்பெற்றஅணிகளைவிளக்குக.

(5 x 5= 25 புள்ளிகள்)

www.kedu.lk

பகுதி II

03. கீழ்க்காணும் உரைப்பகுதியைவாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

இயற்கையாகமனதில் தோன்றும் வெறுப்புணர்ச்சிக்குவடிவுகொடுப்பதன் மூலம் இரண்டுபயன்கள் கிட்டுகின்றன. முதலாவதுயாரைவெறுக்கிறோமோஅவர்மேல் போர் தொடுத்துவெற்றிகாணமுடிகிறது. இரண்டாவதுஅவ்வாறுபெறும் வெற்றியைப் பிறர்புகழவும் காரணமாகிறது.

இவ்வாறு இரண்டுவழிகளிற் பயன் பெறக்கூடுமாதலின் வன்மைமிக்கஅரசர்கள் "போர்"என்றவழியைமேற்கொண்டதில் வியப்படைதல் இயலாது. மேலும் அரசர்கள் புரியும் இந்தப் போர்களைதம்முடையநாட்டுமக்களின் நலத்திற்காகவேசெய்ததாகவும் கூறினர்.அம்மக்களும் இதனைநம்பினர்.

பிறருடையநாட்டின் மேல் போர் தொடுத்துச் செல்லுதல் அரசருக்குரியஅறமாகவும் போற்றிக் கூறப்பெற்றது. தற்காப்புச் செயல்முறையில் போரிடுதல் அன்றியும் பிறர் மேற்படைகொண்டுவலுப்போருக்குப் போதலும் அறமெனக் கருதப்பட்டன. புகழ்வேட்டையாடப் பிறருடையநிலத்தைப் பற்றிக் கவலைகொள்ளாமல் போரிடுதலைஒருவாய்ப்பாகக் கொண்டனர் அற்றைநாள் தமிழர்.

1. வெறுப்புணர்ச்சிக்கு வடிவு கொடுப்பதன் மூலம் கிடைக்கும் பயன்கள் எவை?
2. மன்னர் நடத்திய போர்களை மக்கள் எதிர்க்காமைக்குரிய காரணம் யாதெனக் கருதமுடியும்?
3. அரசர்க்குரிய அறங்களாகக் கருதப்பட்டவை எவை?
4. அற்றைநாள் தமிழர் பற்றிய ஆசிரியரின் மனப்பதிவு என்ன?
5. வலுப்போருக்குப் போதல், புகழ்வேட்டையாடல் என்னும் தொடர்களை விளக்குக?

(5 x 5 = 25புள்ளிகள்)

பகுதி III

04. கானல்வரிஎன்னும் பாடப்பகுதியில்

அ. சோழமன்னனின் பெருமைகள்

ஆ. காவிரிஆற்றின் சிறப்பு

என்பன சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

05. புத்தகசாலை என்னும் கவிதையில்

அ. நூல்களைவாசிப்பதன் பயன்கள்.

ஆ. நூலகம் அமைந்திருக்கவேண்டிய முறைமை

என்பவற்றைவிளக்குக?

(15 புள்ளிகள்)

06. மின்மினிகளால் ஒருதோரணம் என்னும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு

அ. ஹைக்கூ என்றால் என்ன?

ஆ. சிறிய சொற்களால் மிகப்பெரிய அர்த்தங்களை வெளிப்படுத்தும் ஹைக்கூவின் திறனை உதாரணங்களுடன் விளக்குக.

(15 புள்ளிகள்)

07. "எலிகளுடனான மனிதனின் போராட்டத்தை நகைச்சுவையாகச் சித்திரிப்பதாக எலியம் சிறுகதை அமைந்துள்ளது",

இக்கூற்றின் பொருத்தப்பாட்டை விளக்குக.

(15 புள்ளிகள்)

www.ikeou.lk

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2019
தரம் - 11 தமிழ் இலக்கியநயம்
புள்ளித்திட்டம்

வினா 01.

1. அ. கன்றைப் பட்டினிபோடுதல்
   ஆ. கன்று இறத்தல்
2. அ. கார்காலம் முடிந்ததும் வருதல்
   ஆ. சுக்கிரீவன்
3. அ. மைமூன் கிழவியின் பணத்தைத் திருடியமை
   ஆ. ஏனைய கடிதங்களைக் கொடுத்தல்
4. அ. வழிப்பறிக் கொள்ளையரின் மனதைமாற்றக் கூடியது
   ஆ. பொருநராற்றுப்படை
5. அ. நல்லநெற்றி/நல்லநெற்றியையுடையபெண்
   ஆ. மன்மதன்

வினா 02.

1. உப்புக் கசந்தாலும் இனிப்பாய்க்கருதுதல்
   குழந்தை அளைந்ததைத் தெய்வ அமுதமாகக் கொள்ளல்
   கரிந்து பொரிந்த உணவிலும் அன்பைக் காணல்
   வேகவைக்கா விட்டாலும் விந்தை உருசி
2. துடிப்பயல் என்று செல்லமாகக் குறிப்பிடல்
   குழந்தை அளைந்த உணவைத் தெய்வ அமுதமாகக் கொள்ளல்
3. விட்டுப்பிரிகையிற் சொட்டுக்கண்ணீர்
4. பாதி வழிவந்து தாமரைக் கைதந்த பச்சை அமுதம்
5. உவமை
   தாமரைக்கை
   உருவகம்
   விண்ணின் அமுதம்

வினா 03.

1. போர் தொடுத்து வெற்றிபெறல்
   வெற்றியைப் பிறர் புகழ்தல்
2. தமது நலனுக்காகவே போர் நடப்பதாக நம்பியமை
3. தற்காப்புக்காகப் போரிடல்
   பிறர் மேற்படை கொண்டு வலுப்போருக்குப் போதல்
4. புகழ்வேட்டையாடுவதற்காகப் பிறருடைய நிலத்தைப்
   பற்றிக் கவலை கொள்ளாமற் போரிடுதலை வாய்ப்பாகக் கொள்பவர்கள்
5. வலுப்போருக்குப் போதல் - தாமாகவே வலிந்து
   போருக்குச் செல்லுதல்
   புகழ்வேட்டையாடுதல் - பெருமளவிற் புகழைத் தேடுதல்

வினா 04.

அ. முழுமதி போன்ற வெண்கொற்றக்குடை உடையவன்
செங்கோலாட்சி செலுத்துபவன்
பகைவர் படை எடுக்க அஞ்சுவதால் அரண்களில்
யாரும் காவல் செய்யும் தேவை இல்லாதவன்
பகைவருக்கு அச்சம்தரும் வேற்படையை உடையவன்
உயிர்களைப் பாதுகாக்கும் ஆணைச்சக்கரம் உடையவன்
நடுநிலையை விரும்புவன்

www.ikeou.lk

ஆ. சோழன் கங்கையில் நீராடினாலும் வெறுப்புக் கொள்ளாதது
பக்கங்களில் விழாக் கொண்டாடுபவர்கள்.
உழவர்கள் ஆகியோரின் ஆரவாரம் கேட்கச் செல்வது
அழகிய பூக்களை ஆடையாகக் கொண்டது
சோழ நாட்டுக்கு வளம் கொடுக்கும் தாயாகஉள்ளது.

வினா 05.

அ. புத்தகங்களை வாசிப்பதால் இயற்கை எழில், இசை, வாசன பல்வேறுசுவைகள் என்பவற்றை அறிந்து கொள்ளலாம். கவிஞரின் உணர்வுகளை
அறிந்து கொள்ளலாம்.
புத்துணர்ச்சிகிடைக்கும்
அனைவரும் சமமென்னும் எண்ணம் உருவாகும்
மக்கள் புனிதமடைந்து புதுவாழ்வு பெறுவர்

ஆ. சர்வகலாசாலை போல எங்கும் நூலகம் இருக்க வேண்டும்
பிறமொழிநூல்களை மொழிபெயர்ப்பதாக இருக்க வேண்டும்
கவிதை, உரைநடை நூல்களைப் பெருமளவிற் சேகரித்துத்
துறைதுறையாக அடுக்கி வைத்திருக்க வேண்டும்
செய்தித்தாள்கள் அனைத்தும் இருக்கவேண்டும்
புதியநூல்களை வாசிக்கத் தரவேண்டும்
வருபவரை மரியாதையுடன் உபசரித்து வாசகர்
பெருகும்படி உழைக்க வேண்டும்.

வினா 06.

அ. சிந்தனை எனும் ஜலப்பரப்பில் எறியப்படும் சிறியகல் : சுஜாதா
தூய்மையான கவிதையின் அடர்த்தியான சாறு பிழிவு –
சின்னதாய் இருக்கும் பெரிய அற்புதம் - அப்துல் வருமான்
பாதியாய் திறந்த கதவு அதன்வழி எம்மை அழைக்கும்
கைச்சைகை
5, 7, 5 அசைகள் கொண்ட ஜப்பானியக் கவிதை

ஆ. உதாரணங்களுடன் விளக்குக.

வினா 07.

எலிகளுக்கும் அவனுக்குமிடையே யுத்தப்பிரகடனம் நேற்றிரவு ஏற்பட்டுவிட்டது. எலியை அவள் தன் மாபெரும் எதிரியாகப் பிரகடனம் செய்தான். எலிகள் எல்லாம் சைவத்தைத் தழுவிவிட்டனவா? அவற்றின் ரத்தத்தின் வாடைகூட ரத்தத்தின் ரத்தங்களுக்கு வீசக்கூடாது. கர்ணனுக்குக் கிடைத்த நாகாஸ்திரத்தை ஒத்த இந்த எலிப்பொறி வரைபடத்தில் அவுஸ்திரேலியாக் கண்டத்தை நினைவுபடுத்தும் ஒரு கிழிசல் பூனையைக் கொண்டுவருதல் - தமிழ்ப்பெயர்கள் செல்லப் பிராணிகளுக்கு ஏனோ அவ்வளவு பொருத்துவதில்லை (தேவருடைய படங்களைத் தவிர)

முடிவு : இப்போது எலிகளை அழிக்கும் எண்ணம் அவனிடம் இல்லாமல் போயிற்று– எலிகளிடமிருந்து தன்னை எவ்வாறு காப்பது என்ற பயம் மேலோங்கத் தொடங்கியது என்பன போன்ற கூற்றுக்கள் மூலம் நகைச்சுவையை விளக்குதல்.

www.kalvi.lk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu